29th October 1962]

(*b*) There is no proposal under consideration for enhancement of the pay of Last Grade Government servants and primary school teachers.

SRIMATHI T. N. ANANDANAYAKI : Is there any proposal to construct houses for N.G.Os. in all district headquarters? Are the Government going to encourage co-operative societies formed by N.G.Os. for constructing houses?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The hon. Member may put a separate question.

MR. SPEAKER : I think the House has no objection to taking about ten minutes more to dispose of the remaining questions.

SRI R. V. SWAMINATHAN : So till 5-30 p.m. we will have questions only?

MR. SPEAKER : Yes.

பாலங்கள் (நீலகிரி மாவட்டம்)

*874 கேள்வி.—திரு ஜே. மாதா கவுடர் : கனம் பொதுப் பணித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) நீலகிரி ஜில்லா, தேனாடுகம்பை-எப்பநாடு ரோட்டில் ஒரு பாலம் அமைக்க கோரி பொது மக்களிடமிருந்து விண்ணப்பம் வந்ததா ?

(இ) பொது மக்களிடத்திலிருந்து எவ்வளவு தொகை வசூலிக்கப்பட்டது ?

(உ) பாலம் கட்டும் வேலை எப்போது ஆரம்பிக்கப்படும் ?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) The villagers of Timeri, Therlathy and other hamlets nearby represented to the Panchayat Union Council, Ootacamund, to construct a bridge at mile 4/1 of the Denadcombai-Ebbanad road.

(*b*) A sum of Rs. 5,000 was credited to the Panchayat Union Funds by the President, Timeri Panchayat.

(*c*) The road has recently been taken over by the Government from the control of the Ootacamund Panchayat Union Council. It is not possible to take up the bridge work during the Third Plan period due to reduced plan provision for roads.

The panchayat union council is taking action to refund the amount credited by the Timeri Panchayat.

திரு. ஜே. மாதா கவுடர் : இந்தப் பாலம் வில்லேஜ் வொர்க்ஸ் கிராண்டிலிருந்து செய்யக்கூடிய வேலை என்று முன்பு எஸ்டிமேட் எல்லாம் போட்டு, காண்டிரிபியூஷன் கேட்டு, சாங்ஷன் செய்யப் பட்ட பிறகு, இந்தப் பாலங்களை ஹைவேஸ் இலாகா எடுத்துக் கொள்ளும் என்று திடீரென்று சர்க்கார் உத்தரவு போட்ட

காரணத்தினாலே, இந்த வேலை தடைப்பட்டுவிட்டது. ஏற்கெனவே போடப்பட்ட பிளான் சாங்ஷன் ஆனபிறகு, வேலையைத் தடைப் படுத்துவது சரியா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. வெ. ராமையா : கனம் அங்கத்தினருடைய பெரு முயற்சியினாலே நீலகிரி ஜில்லாவிலே அநேக ரோடுகளை நேரடியாக அரசாங்கம் எடுத்துக் கொண்டிருக்கிறது. அதனாலே அரசாங்கம் அவைகளுக்கெல்லாம் நிதி வசதி கண்டுபிடித்தாக வேண்டும். அந்த முறையிலே பார்க்கும்பொழுது, இந்தப் பாலத்திற்கு வேலையைத் துவக்க முடியவில்லை. காரணம், போதுமான நிதி வசதி இல்லை. மீண்டும் பரிசீலனை செய்து, தகுந்த காலத்தில் கட்டுவதற்கு முயற்சி எடுக்கப்படும்.

கல்லூரிகள் (தமிழ் போதனாமொழி)

*875 கேள்வி.—திரு. முனு. ஆதி: கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இதுவரை எத்தனை அரசாங்கக் கல்லூரிகளில் தமிழ் போதனா மொழியாக்கப்பட்டுள்ளது ?

(இ) எல்லாக் கல்லூரிகளிலும் இத்திட்டத்தை அமுல் படுத்த அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) In one, Sir; Government Arts College, Coimbatore.

(*b*) The initiative should be taken by the management concerned. The Government have, however, promised some special facilities to students and managements in the shape of fee concessions and stipends and special grants for appointment of staff and purchase of books.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: அதிகமான மாணவர்கள் தமிழைப் படிக்க முன்வருவதற்காக, தமிழில் படிக்கிற மாணவர் களுக்கு அரசாங்கத்தில் வேலை வாய்ப்பு கொடுப்பதில் முதலிடம் கொடுக்க அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: அந்தந்த உத்தியோகத்திற்கு தகுதி நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. தகுதிப்படி வேலை கொடுக் கப்பட்டு வருகிறது.

உயர்தரப் பள்ளிகள் (ஆங்கில போதனாமொழி)

*876 கேள்வி.—திரு. க. ர. நல்லசிவம்: கனம் நிதி அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) உயர்தரப் பள்ளிகளில் ஆங்கிலம்மூலம் பாடம் போதிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

(இ) 1962-ல் எத்தனை பள்ளிகளில் இத் திட்டம் அமுலாகும்?

(உ) இத் திட்டத்திற்காக என்ன விசேட ஏற்பாடுகளைச் சர்க்கார் செய்துள்ளது ?

(எ) அதன் விவரமென்ன ?